Cambridge Assessment International Education

# Cambridge International A Level

**TAMIL** **9689/42**

Paper 4 Texts **October/November 2021**

**2 hours 30 minutes**

*7968406690*

You must answer on the enclosed answer booklet.

You will need: Answer booklet (enclosed)

**INSTRUCTIONS**
- Answer **three** questions in total in **Tamil**, each on a different text:
  - Answer **at least one question** from Section 1.
  - Answer **at least one question** from Section 2.
  - Answer **one other question** from **either** Section 1 **or** Section 2.
- Follow the instructions on the front cover of the answer booklet. If you need additional answer paper, ask the invigilator for a continuation booklet.
- Dictionaries are **not** allowed.
- You may **not** take set texts into the examination.

**INFORMATION**
- The total mark for this paper is 75.
- Each question is worth 25 marks.

## கட்டளைகள்
- மொத்தம் **மூன்று** கேள்விகளுக்கு, வெவ்வேறு பாடப் பகுதிகளிலிருந்து எடுத்து, **தமிழில்** விடை எழுதவும்:
  - முதல் பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - இரண்டாவது பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - முதல் **அல்லது** இரண்டாவது பகுதியிலிருந்து **மற்றொரு கேள்விக்கு** விடை எழுதவும்.
- விடை எழுதுவதற்கான புத்தகத்தின் முதல் பக்கத்திலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும். கீழே **தமிழிலும்** கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன. கூடுதல் விடைத் தாள்கள் தேவைப்பட்டால், தேர்வு அதிகாரியிடம், தொடர்ச்சிக்கான புத்தகத்தைக் கேட்கவும்.
- அகராதிகள் **அனுமதிக்கப்படமாட்டாது**.
- தேர்வு அறைக்குள் எந்தப் பாடப் புத்தகத்தையும் எடுத்துச் **செல்லக்கூடாது**.

## தகவல்
- இந்தக் கேள்வித்தாளுக்கான மொத்த மதிப்பெண்கள் 75.
- ஒவ்வொரு கேள்விக்கும் 25 மதிப்பெண்கள்.

This document has **12** pages. Any blank pages are indicated.

DC (LK) 222554
© UCLES 2021



https://xtremepape.rs/

**விடைத்தாள் புத்தகத்தைப் பயன்படுத்துவதற்கான கட்டளைகள்**

கருப்பு அல்லது கரு நீலப் பேனாவைப் பயன்படுத்தவும்.

வரைபடங்களுக்கோ, கிராப் வரையவோ நீங்கள் எச்.பி.பென்சிலைப் பயன்படுத்தலாம்.


உங்களுடைய பெயர், சென்டர் எண், உங்கள் எண் ஆகியவற்றை, இந்தப்பக்கத்தின் மேலேயுள்ள, அதற்கான இடத்தில் எழுதவும். தெளிவாக, பெரிய எழுத்துக்களில் எழுதவும்.

எழுத்துக்களை அழிப்பதற்கான பேனாவையோ, திரவத்தையோ **பயன்படுத்தக்கூடாது**.

எந்த பார்க்கோடிலும் **எழுதக்கூடாது**.

கொடுக்கப்பட்ட விடைத்தாள் புத்தகத்தில் எழுதவும். தாளின் இரு பக்கங்களிலும் எழுத வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் விடை எழுதிய பின்னர் இரண்டு வரி இடைவெளி விடவும்.

நீங்கள் விடை எழுதும் கேள்வியின் எண்ணை முதல் மார்ஜினில் எழுதவும்.




நீங்கள் விடை எழுதும் கேள்வியில் துணைக் கேள்விகள் இருந்தால் (எடுத்துக்காட்டு 1.a) துணைக் கேள்வி எண்ணை இரண்டாவது மார்ஜினில் எழுதுங்கள்.

நீங்கள் விடைத்தாள் புத்தகத்தில், விடை எழுதுவதற்கான குறிப்புகளையும் பேனாவால் எழுதிப் பழகலாம் ஆனால் மதிப்பெண். **போடவேண்டாத** அத்தகைய குறிப்புகளை அடித்து விடுங்கள். படிக்கமுடியாமல் அடிக்கத் தேவை இல்லை.

விடைத்தாள் புத்தகத்தின் எந்தப் பகுதியயையும் **கிழித்துவிடாதீர்கள்**.

நீங்கள் எழுதிய எல்லா தாள்களையும் கொடுத்து விடுங்கள் தொடர்ச்சிக்காக விடைத்தாள். புத்தகங்கள் வாங்கியிருந்தால் அவற்றையும் விடைத் தாள் புத்தகத்தில் இணைத்து விடுங்கள்.



https://xtremepape.rs/

**BLANK PAGE**



https://xtremepape.rs/

ஏதாவது **மூன்று** கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். முதல் பகுதியில் இருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியில் இருந்து ஒரு கேள்வியும் பகுதி ஒன்று அல்லது இரண்டில் இருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.

**பகுதி 1**

**1 பகுதி (அ) அல்லது பகுதி (ஆ) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a) அகநானூறு**

உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை
பெருஞ் சோற்று அமலை நிற்ப, நிரை கால்
தண் பெரும் பந்தர்த் தரு மணல் ஞெமிரி
மனை விளக்குறுத்து, மாலை தொடரி,
கனை இருள் அகன்ற கவின்பெறுகாலை;
கோள் கால் நீங்கிய கொடு வெண் திங்கள்
கேடு இல் விழுப் புகழ் நாள் தலைவந்தென,
உச்சிக் குடத்தர், புத்தகல் மண்டையர்,
பொது செய் கம்பலை முது செம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறை முறை தரத்தர,
புதல்வற் பயந்த திதலை அவ் வயிற்று
வால் இழை மகளிர் நால்வர் கூடி,
"கற்பினின் வழாஅ, நற் பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை ஆக!" என,
நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி
பல் இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க,
வதுவை நல் மணம் கழிந்த பின்றை,
கல்லென் சும்மையர், ஞெரேரெனப் புகுதந்து,
'பேர் இற்கிழத்தி ஆக' எனத் தமர் தர,
ஓர் இற் கூடிய உடன் புணர் கங்குல்,
கொடும் புறம் வளைஇ, கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த ஓர் புறம் தழீஇ,
முயங்கல் விருப்பொடு முகம் புதை திறப்ப,



https://xtremepape.rs/

அஞ்சினள் உயிர்த்தகாலை, “யாழ நின்
நெஞ்சம் படர்ந்தது எஞ்சாது உரை” என,
இன் நகை இருக்கை, பின் யான் வினவலின்,
செஞ் சூட்டு ஒண் குழை வண் காது துயல்வர,
அகம் மலி உவகையள் ஆகி, முகன் இகுத்து,
ஒய்யென இறைஞ்சியோளே மாவின்
மடம் கொள் மதைஇய நோக்கின்,
ஒடுங்கு ஈர் ஓதி, மாஅயோளே.
-- பாடல் 86

**(i)** சங்க இலக்கியத்தில் தமிழர்களின் திருமணங்கள் முந்தைய காலத்தில் எப்படி இருந்தன, அவற்றில் எவையெல்லாம் இன்றும் பின்பற்றப்படுகின்றன என்பதற்கு இப்பாடல் கூறும் சான்றுகள் என்னென்ன?

**(ii)** அதே பாடலில் வாயில் மறுத்த தோழிக்குத் தலைமகன் தான் தலைமகளைக் கூடி எவ்வாறு இன்பமோடு இருந்ததாக முன்பு நிகழ்ந்ததைப் பற்றி விளக்குகிறான்? [25]

**அல்லது**

**(b) சிலப்பதிகாரம்**

அரசன் சற்றும் ஆராயாமல், “...கொன்று, அச்சிலம்பு கொணர்க ஈங்கு” என்று ஆணையிட்டதன் பின்னணி என்ன என்று விளக்குக. [25]

© UCLES 2021


https://xtremepape.rs/

**2 திருக்குறள்**

**பகுதி (அ) அல்லது பகுதி (ஆ) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** 101. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

102. காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

103. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

105. உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

செய்நன்றி அறிதல் என்ற அதிகாரத்தில் உதவி செய்தவற்கு செய்நன்றியுடன் இருப்பதைப் பற்றி திருவள்ளுவர் கூறும் கருத்துகள் என்னென்ன என்பதை விரிவாக விளக்கவும். [25]

**அல்லது**

**(b)** அவா அறுத்தல் என்பது ஆசையினை ஒழித்தல் பற்றி வள்ளுவர் பெருமான் தரும் விளக்கம் என்ன என்று விவரிக்கவும். [25]

© UCLES 2021


https://xtremepape.rs/

3 தேவாரம் அப்பர்

**பகுதி (அ) அல்லது பகுதி (ஆ) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே.

நமச்சிவாய பதிகம் பாடப்பட்ட சூழ்நிலையையும், அத்தகைய சூழ்நிலையில் நமச்சிவாய என்று சொல்வதினால் இறைவன் அருளினை எவ்வாறு போற்றுகிறார் அப்பர் பெருமான் என்பதை விவரிக்கவும். [25]

**அல்லது**

**(b)** கல்லோடு பிணைத்துக் கடலில் தள்ளப்பட்ட அப்பர் பெருமான் சிவபெருமான் திருவருளால் மீண்டு கடலில் கல்லே தெப்பமாக மாற கரையேறி திரும்பினார் - அப்படி இறைவன் திருவருளைப்பெற காரணமான நமச்சிவாய பதிகத்தை விளக்கவும். [25]



https://xtremepape.rs/

## பகுதி 2

**4 இக்காலக் கவிதைகள்**

**பகுதி (அ) அல்லது பகுதி (ஆ) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** **பாரதியார்**
"கண்ணன் என் சேவகன்" என்னும் கவிதையில் பாரதியார், ஒரு வழக்கமான வேலையாள் தரும் இடையூறுகள் என்னென்ன என்றும் மாறாக சேவகனாக வந்த கண்ணன் எப்படி உதவியாக இருந்தார் என்றும் விவரிக்கிறார்? [25]

**அல்லது**

**(b)** **பாரதிதாசன்**
இயற்கை என்ற தொகுப்பில் பாரதிதாசன் "காடு" மற்றும் "கானல்" பற்றி தனது கவிதைகளில் என்ன கூறுகிறார்? உங்கள் பதிலை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும். [25]

**5 நாவல்**

**பகுதி (அ) அல்லது பகுதி (ஆ) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** மு வரதராசன் எழுதிய "அந்த நாள்" கதையின் போக்கு புதிய உலகம் படைக்கவும், பகைமை பாராட்டாத பயன் கருதாது நாட்டுக்கு பணிபுரியவும் மக்களை அழைக்கிறது என்பதை நீங்கள் ஏற்கிறீர்களா என்று சான்றுடன் விளக்கவும். [25]

**அல்லது**

**(b)** மு வரதராசன் "அந்த நாள்" கதையை அதன் கதாநாயகனே கதை கூறுவது போல் எழுதியிருக்கும் பாணியைப் பற்றி விளக்கி எழுதவும். [25]

**6 நவீன தமிழ்ச் சிறுகதைகள்**

**பகுதி (அ) அல்லது பகுதி (ஆ) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** "ஜன்னல்" சிறுகதையில் கதாநயகன் சீனிவாசனுக்கு ஏற்பட்ட மனஉளைச்சலால் அவன் சந்தித்த இன்னல்கள் என்ன? அதிலிருந்து அவன் மீண்டுவர முடிந்ததா என்பதை விளக்குக. [25]

**அல்லது**

**(b)** சோற்றை வாயில் அடைத்து மூர்ச்சையான நாகுப் பாட்டி எடுத்த முடிவு "பயணம்" சிறுகதையில் மற்றவர் சொல்வது போல் மூளை கலக்கத்தினால் ஏற்பட்டதா அல்லது வேறு காரணமா என்று விளக்கவும். [25]

© UCLES 2021 

https://xtremepape.rs/

**BLANK PAGE**

© UCLES 2021 

https://xtremepape.rs/

**BLANK PAGE**

© UCLES 2021


https://xtremepape.rs/

BLANK PAGE

© UCLES 2021


https://xtremepape.rs/

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which itself is a department of the University of Cambridge.



https://xtremepape.rs/